2006 ஆகஸ்ட் 19] [திரு. சி. ஞானசேகரன்]

பெற்றுக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, இது குறித்து நான் ஏற்கெனவே அறிவிப்புக் கொடுத்திருக்கிறேன். அங்கே சாராயம் காய்ச்சுபவர்கள், அவர்கள் இன்று வனத் துறை அதிகாரிகளையே வெட்டக்கூடிய அளவுக்கு நிலைமை இருக்கிறது. அவர்களிடம் ஆயுதங்கள் இல்லையா? அவர்கள் மாமூல் வாங்கச் சென்ற காரணத்தினால்தான் இப்படிப்பட்ட பிரச்சினைகள், அவர்கள் அடி வாங்கி வர வேண்டிய நிலை வந்தது என்றும் பத்திரிகைகளிலே செய்திகள் வந்தன. இது குறித்து அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வந்து, மாண்புமிகு முதல்வர் அவர்கள், வனத் துறை அமைச்சர் அவர்கள் கடுமையான நடவடிக்கை எடுத்து, இப்படிப்பட்ட இந்த மாமூல் பெறக்கூடிய நிலையை அவர்கள் தவிர்த்து, மாமூல் வாழ்வுக்கு...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் கொடுத்த வேண்டுகோள் என்னுடைய பரிசீலனையில் இருக்கிறது. துறைக்கு அனுப்பியிருக்கிறோம். பதில் வந்ததற்குப் பிறகு எடுக்கப்படும்.

### (இ) இலங்கைத் தமிழ் அகதிகள் இலங்கை கடற்படையினரால் துன்புறுத்தப்படுதல்

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,... *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சொல்லுங்கள். எல்லோரும் எழுந்திருக்காதீர்கள். உட்காருங்கள் முதலில். திரு. சின்னப்பன், உட்காருங்கள். பொள்ளாச்சி ஜெயராமன், உட்காருங்கள்.

***திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலங்கையில் நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற உள்நாட்டு பிரச்சினையில் சிங்கள இராணுவம் நடத்துகின்ற காட்டுமிராண்டித்தனமான தாக்குதலுக்குப் பயந்து, இலங்கை வாழ் தமிழர்கள் இன்றைக்கு அகதிகளாகத் தமிழகம் நோக்கி வந்துகொண்டிருக்கின்றார்கள். அவர்கள் உயிருக்குப் பயந்து, அகதிகளாகத் தமிழகம் நோக்கி வந்து கொண்டிருக்கின்றார்கள். வருகின்ற வழியில் மீண்டும் அவர்களை சிங்கள இராணுவம் தொடர்ந்து விரட்டுவதும், அப்படி விரட்டுகின்றபொழுது, கடந்த நான்கு தினங்களுக்கு முன்பாக அந்த களேபரத்தில், ஒரு 6 மாதக் குழந்தை தவறிக் கடலில் விழுகின்ற ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கின்றது. அப்படி வருகின்ற நேரத்தில், கடந்த 14 ஆம் தேதியன்று படகில் வந்த 5 பேர் தவறிக் கடலில் விழுந்து இறக்கக்கூடிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டு இருக்கின்றது.

அப்படி இறந்தவர்களில் ஒருவர், திருமணமாகி மூன்றே தினங்கள்தான் ஆகியிருந்த நிலையில் அந்தத் துயரச் சம்பவம் நடந்து, தொடர்ந்து இதுபோன்று நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. அங்கு நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற உள்நாட்டுப் போரில், அகதிகளாகத் தமிழகம் வருகின்ற இலங்கை வாழ் தமிழ் மக்களுக்கு, அவர்கள் பாதுகாப்பான முறையில் இங்கு வந்து சேர்வதற்குரிய நடவடிக்கைகளை இந்திய அரசுமூலமாகத் தமிழக அரசு எடுக்குமா என்பதை நான் அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடவடிக்கை எடுக்கப்பட்டுக் கொண்டுதான் இருக்கிறது. தொடர்ந்து நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கின்றேன். அன்றைக்குக்கூட விளக்கியிருக்கின்றேன். மத்திய சர்க்கார்மூலமாக இங்குள்ள தமிழர்களுக்கு, ஈழத் தமிழர்களுக்கு, அதுவும் அகதிகளாக வந்துள்ள தமிழர்களுக்கு, மாதந்தோறும் 200 ரூபாய்தான் கொடுக்கப்பட்டு வந்தது. அதைக்கூட நாங்கள் இப்பொழுது 400 ரூபாயாக, மாநில அரசின் சார்பாக 200 ரூபாய் உயர்த்தித் தந்துகொண்டிருக்கின்றோம். மேலும், உதவிகளைச் செய்யத் தயாராக இருக்கின்றோம். அவர்கள் புறப்பட்டு வரும்பொழுது வழியிலே, எங்கே போய் அவர்களைச் சந்தித்து அழைத்து வருவது என்பதெல்லாம் பெரிய பிரச்சினை. அந்தப் பிரச்சினைகளை எப்படி சமாளிப்பது என்பதைக் கடற்படை அதிகாரிகளோடு கலந்து பேசி, ஆவன செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**(ஆ) உறுப்பினர் கொடுத்துள்ள முன்னறிவிப்பு**—தொடர்ச்சி

**திரு. வி.பி. கலைராஜன்:** தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை விதி, (குறுக்கீடு) நீங்கள் கொடுத்ததெல்லாம் துறைக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. பதில் வந்ததற்குப் பிறகு எடுக்கப்படும். உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. கலைராஜன், உட்காருங்கள். (குறுக்கீடு) அனுமதி இல்லை, உட்காருங்கள்.

*முற்பகல் 10–55*

**திரு. வி.பி. கலைராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்களுக்குப் பதில் கொடுக்கப்பட்டிருக்கிறது. உட்காருங்கள். (குறுக்கீடு) கலைராஜன்,